# தூதன்

தூதன்-25 ஜூலை-ஆகஸ்ட் 2016 தூது-7

ஞானம், முத்துக்களைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றது.



## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| ஆராதனை பாடல்கள்–ஜூலை | 11 |
| செயலர் மடல் | 12 |
| கல்லெறி யாச்சு ஸ்தேவான் உயிர் போச்சு! | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| கழுகு | 16 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| தெரிந்து கொள்வோம் | 24 |
| Young Readers Column | 26 |
| Health Tips | 28 |
| Birthday Celebrants - July | 30 |
| Wedding Anniversary Celebrants - July | 33 |
| Birthday Celebrants - August | 36 |
| Wedding Anniversary Celebrants - August | 38 |
| ஆராதனை பாடல்கள்–ஆகஸ்ட் | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae

## திருப்பொழிவுத் திருப்பணி (Ordained Ministry)

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

வாழவைத்து வழிநடத்தும் வல்ல ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். விடுமுறை நாட்களில் தங்கள் சொந்த ஊருக்குச் செல்லுகின்ற குடும்பங்களுக்கும், இங்கேயே தங்கித் தரித்திருக்கிற குடும்பங்களுக்கும், வேண்டிய பயண அனுகூலங்களையும், பாதுகாப்பையும் ஆண்டவர் தந்தருள்வாராக! மாறுகின்ற தட்பவெப்ப சூழல்களிலும், இயற்கையின் சீற்றங்களிலுமிருந்து ஆண்டவர் படைப்பனைத்தையும் பாதுகாக்கத் தொடர்ந்து மன்றாடுவோம். அதேநேரம், படைப்பிலே மகுடப் படைப்பாகிய நாம், நமது பொறுப்புக்களை உணர்ந்து செயல்படுவோம். நம்மையும், நம் உழைப்பையும் ஆதரிக்கும் ஐக்கிய அரபு நாட்டிற்காகவும், அதன் வளங்களுக்காகவும், நம் தாய்த்திருநாட்டிற்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், உலக சமாதானம், இணக்கத்திற்காகவும் இறைவனிடம் இறைஞ்சுவோம். திருச்சபையின் முக்கிய விழாக்கள் அல்லது நிகழ்வுகளல்லாத காலங்களில் திருமறை மற்றும் திருச்சபையின் அடிப்படைக் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் சாக்கிரமெந்துகளைப் பற்றி சற்றுப் பகிர்ந்து கொள்ள ஆசிக்கிறேன்.

### திருப்பொழிவு என்னும் சாக்கிரமெந்து (The Sacrament of Ordination):

இன்று நம் சபைகளில் மும்மடிப்புத் திருப்பணியாளர்கள் (trifold ministers) இறைப்பணி செய்கின்றனர். பேராயர் - ஆயர் - டீக்கன் (Bishop - Presbyter - Deacon) என்ற இந்த மூன்று திருப்பணிப் பொறுப்பாளர்களும் திருப்பொழிவு (Ordination) பெற்ற சமய குருக்களாகக் கருதப் படுகின்றனர். இவர்களுக்குத் திருப்பணியில் உதவியாக பொது நிலையினரும் (commissioned lay leaders, lay preachers and catechists) திருப்பணிக்கு அழைக்கப்பட்டு திருப்பொழிவு பெறுகின்றனர். அவர்களைப்பற்றி மற்றொரு கட்டுரையில் காணலாம். இந்த மடலில் சமய குருக்களின் திருப்பொழிவு பற்றி திருமறையின் வெளிச்சத்தில் விரிவாகக் காணலாம். ORDAIN என்கிற இவ்வார்த்தை "To order" என்பதிலிருந்து உருவானதாகும். அதாவது "ஒழுங்குபடுத்துதல்" அல்லது "திருப்பணி ஒழுங்கிற்கென பிரித்தெடுக்கப்படுதல்". அதுமாத்திரமல்ல "இறைப் பணிக்காக ஒருவரைப் பிரித்தெடுத்து, பயிற்றுவித்து, திருநிலைப் படுத்துவது" (Anoint or confer or install an individual for the sacred ministry) என்றும் இது பொருள்படும்.

**சாக்கிரமெந்தின் துவக்கமும், வளர்ச்சியும் (The origin and development of the sacrament):** ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு போன்ற ஆதித்தந்தையரின் குடும்பங்களை இறைவன் பிரித்தெடுத்து, வாழவைத்து, வழிநடத்தி ஆசி வழங்குகிறார். யாக்கோபு திருத்தந்தையரின் வழித்தோன்றல்கள் 12 கோத்திரங்களாக (Tribes of Yahweh) உருவாகின்றனர். அதிலே லேவி (Levite) என்கிற ஒரு கோத்திரத்தை மட்டும் பாலைநிலத்திலும், கானான் நாட்டின் திருத்தலத்திலும் இறைப்பணிக்கென ஆண்டவர் முன்குறிக்கிறார். மற்ற கோத்திரங்களின் பத்திலொரு பாக(Tithe) உரிமைகளும், சொத்துக்களும் அவர்களுடன் பங்கிடப்படவும், மற்றெல்லாருக்காகவும் இந்த லேவி கோத்திரத்து ஆசாரியர்களும், லேவியர்களும் இறைத்திருப்பணிவிடையை தேவாலயத்திலே நிறைவேற்றவும் வேண்டும் எனவும் கட்டளை வழங்கப்பட்டு அதுவே வழிவழியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. (யாத்திராகமம் 28:1 முதல் 29:37 வரை, லேவியராகமம் 8:1 முதல் 15:33 வரை). காலப்போக்கில் ஆசாரியர்கள் அல்லது லேவி கோத்திரத்தார் இஸ்ரவேலை வழிநடத்திச் செல்லுகின்ற தலைவர்களாகவும் விளங்கினர் (மோசே, ஆரோன்). இஸ்ரவேலை வழிநடத்தியதால் இவர்கள் பிற்காலத்தில் மேய்ப்பர்கள் (Shepherds) எனவும் உணரப்பட்டனர். இதன் வழியாக இறைவனே தன்னை இஸ்ரவேலுக்கும், முழுமனுக் குலத்திற்குமான மேய்ப்பராகவும் வெளிப்படுத்துவதையும் நாம் காணமுடிகிறது (சங்கீதம்23). ஆகவே இறைப்பணியைச் செய்யமட்டுமல்ல, இறைவழியிலே மக்களை நடத்தவும் இவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டனர். (The ordained are not only called to serve the people of God but also to lead them in God's way)

**இயேசு என்னும் உத்தமபிரதான ஆசாரியன் (Jesus the Good High Priest):** இறைத்திருப்பணிக்கென பிரித்தெடுக்கப்பட்ட ஆலயத்திருப்பணியாளர்கள் ஆசாரியர்களாகவும், லேவியர்களாகவும் பல்வேறு நிலைகளிலே (cadres) தம் அழைப்பை உணர்ந்து பணி செய்தனர். இறைநெறியில் மக்களை வழிநடத்தி, உடன்படிக்கை பிறழ்ந்து போகின்ற சூழல்களிலெல்லாம் தம்மையும், மக்களையும் மீண்டும் இறைநெறிக்கு உட்படுத்தினர் (எஸ்றா). இப்படித் தம் பணியில் தவறிய அதாவது தாமும் சுயநலமாய் நின்று மக்களையும் "பாகால்" என்று தனிப்பட்ட செழிப்பின், சுயநலத்தின் கடவுளைப் பின்பற்றவைத்து, இறைவன் தந்த உடன்படிக்கையின் உன்னத செழிப்பை கேளிக்கையாக மாற்றி, சமூகத்தில் ஏற்றத்தாழ்வை உண்டாக்கி (ஏழையை ஒரு ஜோடி செருப்புக்கு விற்றல்) மக்களைத் தவறாக வழிநடத்தின மேய்ப்பர்களும், அவர்களுக்குச் செவிகொடுத்த சுயநல மந்தைகளும் கர்த்தரால் கண்டிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டனர் (எசேக்கியேல் 34-35). ஆகவே வீழ்ந்துபோன மனுக்குலத்தைச் சீர்செய்து, இறைவழியில் திருப்பிட தன்னுயிர் கொடுத்த நல்ல மேய்ப்பரே

நமதாண்டவர் இயேசு (யோவான் 10). இவரது உத்தம பிரதான ஆசாரிய இறைவேண்டலில் அனைவரும் ஒன்றாயிருக்கும்படியும், கடவுளை மட்டும் மாட்சிப்படுத்தி சான்று பகரவேண்டும் என்பதையும் நினைப்பூட்டி, உலகின் இச்சைகளால் கறைபடாமல் தம்மைக் காத்துக் கொள்ளத் தம் அடியார்களை, குமாரன்மீது நம்பிக்கை கொண்டவர்களை அழைக்கிறார் (யோவான் 17). Jesus the good high priest has restored back the broken covenant and calling his followers to remain in unity, oneness and keep themselves away from any world by pleasures or temptations.

### திருச்சபையும், திருப்பொழிவும் (Church and Ordination):

தமது சீடர்களுள் ஒருவரான சீமோனைப் பேதுரு (Petros - பாறை) என அழைத்து அவர்மீது தம் சபையைக் கட்டுவதாக வாக்களித்த ஆண்டவர் (மத்தேயு 16:18) அவருடனான திருத்தூதர் அனைவரையும் கொண்டு பெந்தேகொஸ்தே நாளிலே தூய ஆவியராய் நின்று திருச்சபையை (Community or assembly of the people of God) உருவாக்குகிறார். “கிறிஸ்துவை நம்புகிற அனைவரும் ஆசாரியர்களே” (1 பேதுரு 2:9) என்ற பேதுரு அடிகளாரின் கூற்றின்படி நாமனைவருமே நம் கிறிஸ்தவ அழைப்பிலே சான்று பகர அவரவர் தத்தம் நிலைமையிலே அழைக்கப்பட்டுள்ளனர். திருச்சபையை ஆன்மீகத்தில் வழிநடத்தவும், சமூகத்தில் சான்று பகரவும் மும்மடிப்பு திருப்பணியான கண்காணிகள் (Bishops), மூப்பர்கள் (Presbyters) மற்றும் ஊழியக்காரர்கள் (Deacons), ஊழியக்காரிகள் (Deaconnesses) நியமிக்கப்பட்டு, திருப்பணி இன்றுவரை நடைபெற்றுவருகிறது.

ஆண்டவரின் வார்த்தையின்படியும், கட்டளையின்படியும், தெரிவின்படியும், அப்போஸ்தலப் பாரம்பரியத்திலும் உருவான திருப்பொழிவையும், திருப்பொழிவு செய்யப்பட்டோரையும் உங்கள் இறைவேண்டலில் நினைவுகூறுங்கள். “அழைத்தவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்” ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

## Answers sent by the following children for June 2016

Age 4 to 12

1.Anne Wesley Paul 2.Jane Wesley Paul 3.Sheryl Selvam
4.Vincent Selvam 5.Jayanth Inbakumar 6.Jeshua Inbakumar
7.Vanna Bernice Sujin 8.Allen Paul Daniel 9.Carlton Charles
10.Edlyn Thayal Durairajan 11.Kessha Jared 12.Jerson Cris Vijil

Age 13 and above

1.Charinda Charles 2.Shamitha Sigamony

## பெரும்பாடுடைய பெண்ணின் பெரிய விசுவாசம்
## (மத்தேயு 9:20-22, மாற்கு 5:25-34, லூக்கா 8:43-48)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

சுகம் அளிக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜூலை-ஆகஸ்ட் மாதங்களின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாறுகின்ற தட்பவெப்ப நிலைகளாலும், பழக்கவழக்கங்களினாலும் ஏற்படுகின்ற எல்லா நோய்களிலிருந்தும் கர்த்தர் உங்களைக் காப்பாராக. அவரே நம் பரிகாரி, நம்பிக்கை, ஆறுதல், பெலன், கோட்டை, அரண், புகலிடம், நம்மை ஆற்றல்படுத்துகிறவர், நிமிர்ந்து நிற்கச் செய்கிறவர், அடையாளப் படுத்துகிறவர், புதுவாழ்வு தருகிறவர், வாழவைத்து வழிநடத்துகிறவர். ஆகவே இப்படிப்பட்ட கர்த்தர் நம்மோடு கூட இருப்பதினால் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாம் சோர்ந்து போகவேண்டியதில்லை என்கிற ஆழமான விசுவாசத்தைப் பெரும்பாடுள்ள பெண்ணின் வாழ்க்கையின் வழியே காண்போம். இப்பெண்ணின் நேர்மை, தாழ்மை, தனிமையிலும் துணிவு, ஆண்டவரைப்பற்றிய அறிவு போன்றவை நம்மை ஆச்சரியப் படுத்துகின்றன. குணமாக்கப்பட்ட இப்பெண்ணே வெரோனிகா என்று அழைக்கப்பட்டு பிலிப்பு, செசேரியாவில் ஆண்டவரின் சாட்சியாக வாழ்ந்தார் என்கிற ஒரு வரலாறும் உண்டு. இவரிடத்தில் நாம் கற்றுக்கொள்ள ேண்டியவை:

**1.தோல்வியிலும் விசுவாசம் (Faith in Failures) :** தன் காலத்தில் இருந்த அநேக மருத்துவர்களைச் சந்தித்திருக்கலாம். அனைவராலும் கைவிடப்பட்ட நிலையிலும், நோய் அதிகரித்த வலி வேதனையிலும், அதிக இரத்தப்போக்கினால் உண்டான பெலவீனமான சூழ்நிலையிலும் இப்பெண் இருந்தாலும், இத்தோல்விகளையெல்லாம் கடந்து பெரிய விசுவாசத்தைக் கொண்டிருந்தார் என்பதை நாம் அறிய முடிகிறது. ஆண்டவர் இயேசுவைத் தன் வாழ்வின் ஒரே பரிகாரியாகத் தோல்விகளின் மத்தியிலும் இவர் கண்டு விசுவாசித்து தொட்டு சுகம் பெற்றது ஆச்சரியமல்லவா!

**2.உடனடி சுகம் (Immediate Healing) :** நற்செய்தி நூல்களில் முதலில் எழுதப்பட்டது மாற்கு என்பதை நாம் அறிவோம். இயேசுகிறிஸ்துவின் குணமாக்கும் நிகழ்ச்சிகளில் ஏறக்குறைய 27 முறை ‘உடனே’ என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதிகத் தேவையில் இருப்போருக்கு ஆண்டவரின் அற்புத சுகம் உடனே கிடைக்கிறது. பல நேரங்களில் நம்முடைய வேண்டுதல்கள் கேட்கப்படாமல் தாமதிக்கின்றன எனவும், பல நேரங்களில் உடனடியாக கேட்கப்படுகின்றன எனவும் நாம் உணர்கிறோம். இப்பெண்ணைப் பொறுத்தவரை ஆண்டவருடைய ஆடையின் ஓரத்தைத் தொட்டவுடன் உடனே சுகம் பெறுகிறாள். அது ஆண்டவர் பெயரில் அவர் வைத்த நம்பிக்கை மாத்திரம் அல்ல, ஆண்டவர் தமது சித்தத்தின்படி தன்னுடைய வல்லமையை சிலருக்கு உடனே வெளிப்படுத்துகிறார். பெயரும், அடையாளமும் தெரியாத ஒரு பெண்ணுக்கு ஆண்டவர் இயேசு தரும் உடனடி சுகம் ஆச்சரியமல்லவா!

**3. தைரியமான சாட்சி** (Bold Public Witness) : ஆண்டவருடைய ஆடையைத் தொட்டு சுகம் பெற்றவுடனேயே அவரது சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, மக்கள் பார்க்கிறார்களே என்று வெட்கப்படாமல், ஏன் தொட்டாய் என்ற கேள்விக்குப் பயப்படாமல் இந்தப் பெண் தைரியமாய் மக்கள் நடுவிலே நின்று தான் சுகம் பெற்றதையும், ஆண்டவரைத் தொட்ட காரணத்தையும், ஜனங்கள் நடுவிலே அறிவிக்கிற தைரியமுள்ள சாட்சியாக மாறுகிறார். இது ஆண்டவர் கொடுக்கிற தைரியம், பயம் நீக்கும் தைரியம். பொதுவாகப் பெண்கள் தன் உதிரப்போக்கை மக்கள் நடுவிலே சொல்வதற்கு வெட்கப்படுவார்கள். அந்த ஆண் ஆதிக்கத்தையும் உடைத்தெரிந்த இப்பெண்ணின் துணிச்சல் ஆச்சரியமல்லவா!

**4. பாராட்டும் ஆண்டவர்** (Commending Lord) : மக்கள் நடுவிலே தைரியமாய் தன் நிலைமையை, விசுவாசத்தை, சுகம் பெற்றதை எடுத்துச் சொன்ன அடையாளம் தெரியாத இப்பெண்ணை ஆண்டவர் மெச்சுகிறார். அவரே, 'மகளே' என்று அழைத்து உரிமை தருகிறார். உறவு தருகிறார். திடன் கொள் என்று சொல்லி அவர் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் மேலும் உறுதிப்படுத்துகிறார். உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று அவரைப்பற்றி சான்று பகர்ந்ததன் மூலம் அவரது விசுவாசத்தை, இரட்சிப்பின் விடுதலையின் அடையாளமாய்க் காட்டுகிறார். சமாதானத்தோடே போ என்பதன் மூலம் இனி அவரது வாழ்வில் நிம்மதியையும், அடையாளத்தையும், அமைதியையும் உறுதிப்படுத்துகிறார். சமூகமே அவலமாய்ப் பார்த்த ஒரு பிணியாளிப் பெண்ணை சுகப்படுத்தி உயர்த்திய ஆண்டவரின் பாராட்டுக்கள் ஆச்சரியமல்லவா!

**5.வரலாற்றுப்பெண்** (Historical Woman) : ஆதித் திருச்சபையின் ஒரு வரலாற்றுக்குறிப்பின்படி ஆண்டவரால் பெரும்பாட்டிலிருந்து சுகமாக்கப்பட்ட இப்பெண்ணே சிலுவைப்பாதையில் ஆண்டவருடைய இரத்தத்தையும், வேர்வையையும் தம் கைக்குட்டையால் துடைத்தாள் என்று அறியப்படுகிறது. அதைத் தூய வெரோனிகாவின் அடையாளம் என்று கி.பி.320-ல் செசேரியாவின் பேராயர் தன் வரலாற்றுக்குறிப்புகளில் எழுதி வைத்திருக்கிறார். இன்றும் இயேசுவின் பாடுள்ள முகமாக கைக்குட்டைகள் புனித அடையாளங்களாக விற்பனைக்கு வைக்கப்பட்டு பல விசுவாசிகள் அதை வாங்கி ஆண்டவருடைய பாடுகளை மாத்திரமல்ல இப்பெண்ணின் (Veronica) விசுவாசத்தையும் அறிந்து உணர்வது ஆச்சரியமல்லவா!

நாமும் ஆண்டவரால் எத்தனையோ சுகம் பெற்றிருக்கிறோம். இவரைப்போல தைரியமும், தன்னம்பிக்கையும், தோல்வியிலும் ஆழமான விசுவாசமும் நமக்கு உண்டா? சிந்திப்போம்! சாட்சி பகருவோம்!!

இறைப்பணியில்,
திருமதி.தீபா கிறிஸ்தோபர்,
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## வாக்குத்தத்த செய்தி

### "உன் கண்களை ஏறெடுத்துப்பார்" ஆதியாகமம் 13:14

நம்பினோரை ஆச்சரியமாய் நடத்த வல்லமையுள்ள ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இப்புதிய மாதத்தைக் காண ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார். அவரைச் சார்ந்து வாழும் வாழ்வில் நமக்குப் போதுமானவராக, தேவைகளைச் சந்திக்கிறவராக, புதுப்பெலன் கொடுத்து, இந்த மாதத்தில் அனுதினமும் நம்மை நடத்த வல்லவராய் இருக்கிறார்.

நாம் ஆண்டவரால் நடத்தப்பட்டு அவரைச் சார்ந்து கொள்ள ஒப்புக் கொடுப்போமாயின் இந்த மாதம் நமக்குக் கொடுக்கும் அருள் வார்த்தை "உன் கண்களை ஏறெடுத்துப் பார்".

ஆபிரகாமை அழைத்த ஆண்டவர் இந்த வார்த்தையைச் சொல்லும்போது ஒரு ஆசீர்வாதம் அவனுக்கு உண்டாகிறதைப் பார்க்கிறோம். இதே ஆசீர்வாதத்தை இந்த மாதம் நமக்கும் தர வல்லவராயிருக்கிறார்.

எப்பொழுது, ஏறெடுத்துப்பார் என்ற அருள் வார்த்தை நம் வாழ்வில் கிரியை செய்யும்படி செய்வார் என்பதை 3 குறிப்புகளில் காணலாம்.

### 1.ஏறெடுத்துப்பார் (பிரித்தெடுக்கப்பட்டபின் ஆதி.13:14) :

யாரை, எதை, விட்டுப் பிரித்தெடுக்கப்படவேண்டும்? தேவன் ஆபிரகாமை லோத்தை விட்டு பிரித்தெடுத்தார். லோத்துவின் எண்ணம், சிந்தை, உலகத்தைச் சார்ந்ததாகவே இருந்தது (சோதோம் மேல் விருப்பம்). ஆபிரகாமோ வாக்குத்தத்தம் செய்தவரையும், அவர் அருளிய வாக்குத்தத்தத்தையும் நோக்கிப்பயனித்தவன் (கானான்). நம்முடைய ஐக்கியம் யாரோடு, இப்படிப்பட்டவர்களை விட்டு விலகும்போது ஆபிரகாமைப் பார்த்துச் சொன்னார், உன் கண்களை ஏறெடுத்துப் பார் என்றார். அதில் தொடர்ச்சியான ஆசீர்வாதங்கள் உண்டு (வ15). சுதந்தரித்துக்கொள்வாய் (வ16), விருத்தியும் பெருக்கமும் நடந்து திரி, ஒரு சத்துருவும் உனக்கு தடை செய்வதில்லை, நீ செய்வது வாய்க்கும். நம்மை ஆராய்ந்துப் பார்த்து தேவன் விரும்பாத உலக சிநேகம் சிந்தையுள்ளவர்களோடு உள்ள ஐக்கியத்தை விடுவோம், ஆசீர்வாதம் பெறுவோம், வாக்குத்தத்தத்தை நோக்கிப் பயனிப்போம்.

**2.ஏறெடுத்துப்பார்** (மாம்சசிந்தை அழிக்கப்படும்போது ஆதி.17:26) :

ஆபிரகாமோடு ஆண்டவர் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக விருத்தசேதனத்தை நியமித்தார், அதாவது மாம்சம் வெட்டி எறியப்படுதல். இதைச் செய்து நிறைவேற்றின பின்பு அவன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது (ஆதி.18:2) பரலோகத்தின் தூதர்களைக் கண்டான். அவர்கள் அவனுக்கு நல்ல செய்தி கொண்டு வந்தார்கள். நீண்ட நாள் காத்திருக்குதலை முடிவுக்குக் கொண்டுவந்தனர். தடைபட்டுப்போன நன்மை உண்டாகும் என்று சொல்லப்பட்டது. பரலோகத்திலிருந்து வந்த தூதர்களால் வாழ்வில் இன்பம் உண்டா? என்று வாழ்வில் வெறுப்புற்ற நிலையில் இருந்த சாராளுக்குச் சொல்லப்பட்டது, கர்த்தரால் ஆகாத காரியம் இல்லை என்று (வ14) இந்த மாதம் நமக்கும் இதே ஆசீர்வாதத்தைக் கொடுப்பார்.

கலா.5:19-21-லிருந்து பார்க்கும்போது மாம்ச கிரியைகளைக் குறித்து பவுல் எழுதுகிறார். இவைகள் நம் தனிப்பட்ட வாழ்விலிருந்து, குடும்பத்திலிருந்து, சபையிலிருந்து வெட்டி எறியப்படும்போது ஆசீர்வாதம் பரத்திலிருந்து உண்டாகும்.

**3. ஏறெடுத்துப்பார்** (கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆதி.22:13) :

கீழ்ப்படிதலுக்கு நல்ல உதாரணம் ஆபிரகாம். கீழ்ப்படிகிறவர்களுக்கு சகலமும் ஆயத்தமாயிருக்கிறது. ஆண்டவர் கேட்டபடியினால் தன் மகனைப் பலி செலுத்தக் கொண்டு சென்றான். தன்னிடம் இருந்த சிறப்பை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கச் சென்ற அந்தக் கீழ்ப்படிதலை தேவன் கனம்பண்ணினார். அவன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது ஒரு ஆட்டுக்குட்டி கண்டான். அதை பலி செலுத்தி யெகோவாயீரே என்று பெயரிட்டான். அதற்குக் கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக் கொள்ளப்படும் என்று அர்த்தம்.

தேவ கட்டளைக்கும் விருப்பத்திற்கும் கீழ்ப்படிகிறவர்களுடைய வாழ்க்கையில் கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் யெகோவாயீரேயாக இந்த மாதம் தேவன் உங்கள் வாழ்வில் வெளிப்படுவார்.

உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்.

இறைப்பணியில்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

## சிறுவர்களுக்காக ஓர் சிறுகதை

அருண், தான் வரைந்த படத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அழகாக வந்திருக்கிறது என்று அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். 10th Grade படிக்கும் அவன் அன்று Botany Record note-ஐ ஆசிரியரிடம் கொடுக்க வேண்டியிருந்தது. அதற்காக ஒரு Hybiscus வரைந்து அதன் பாகங்களைக் குறித்து வைத்தான். அவனுடைய தங்கை ரூத் மெதுவாக எட்டிப் பார்த்தாள். போடி, போ என அவளை விரட்டிய அருண் Record note-ஐ School Bag-ல் வைத்துவிட்டு, குளிக்கச் சென்றான். குளித்துச் சாப்பிட்டுவிட்டு, அம்மாவிடம் விடைபெற்று, பையை எடுத்துக்கொண்டு பள்ளிக்குக் கிளம்பிவிட்டான்.

அந்தப் பையிலோ Record Note இல்லை என்பது அவனுக்குத் தெரியாது. வகுப்பில் நுழைந்த வகுப்பாசிரியர், Record Note-ஐ எல்லாரும் முன்கொண்டு வந்து வையுங்கள் என்றார். அருண் பையைத் திறந்தான். அதில் Record Note இல்லை. உள்ளே வைத்தது நன்றாக நினைவில் இருக்கிறதே என எண்ணிக் குழப்பமடைந்தான்.

அருணைக் கவனித்த ஆசிரியர், ஏண்டா காலையில் என்ன சாப்பிட்டாய் என்று கேட்டார். இவர் ஏன் இதைக் கேட்கிறார் என அருண் நினைத்தாலும், தோசை சார் என பதிலளித்தான். சாப்பிட மட்டும் ஞாபகம் வைத்துக்கொள், ஆனால் Record Note கொண்டுவர மட்டும் மறந்துவிடு என கடுமையான குரலில் கூறினார். இல்லை சார், நான் நோட்டை எடுத்து பையில் வைத்தேன் எனக் கூறினான் அருண். அப்படியானால் அது பறந்து போய்விட்டதோ எனக் கேலியாகக் கேட்டார் ஆசிரியர். மாணவர்கள் அனைவரும் சிரிக்க, அருண் தலைகுனிந்தபடியே நின்றான். சரி, நாளைக்குக் கொண்டு வந்துவிடு, அப்படியே 5 Dhms அபராதமும் கொண்டு வந்துவிடு என்று ஆசிரியர் கூறினார்.

மாலையில் வீட்டுக்குள் நுழைந்தபோது, அம்மா அவனிடம், ஏண்டா! காலையில் அவ்வளவு பரபரப்பாக வரைந்துவிட்டு நோட்டை டி.வி. மீது வைத்துவிட்டு போய்விட்டாயே, நீ போனபிறகுதான் கவனித்தேன் எனக் கூறினார்கள். அங்கே எப்படிப்போனது என குழம்பிக்கொண்டிருந்த வேளையில், அவனுடைய தங்கை, சாரி அண்ணா, நான்தான் அதை

வெளியில் எடுத்துப் பார்த்துவிட்டு பள்ளிக்குப் புறப்படும் அவசரத்தில் மறந்துபோய் டி.வி. மேல் வைத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு எனக் கெஞ்சினாள்.

அருணோ அவளிடம், உன்னை மன்னிக்கமுடியாது எனக் கடுங் கோபத்துடன் தங்கையை அடித்தான். Room-க்குள் போய் டமாரெனக் கதவைச் சாத்தினான். இரவில் அப்பா வரவும், ரூத் அவரிடம் ஓடிச்சென்று எல்லாவற்றையும் அவரிடம் சொன்னாள். அப்பா அருணை அருகில் அழைத்தார். அவனிடம், நீ செய்த தவறையெல்லாம் இயேசுசாமி மன்னித்து உன்னை அவருடைய பிள்ளையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார் அல்லவா? பிறகு ஏன் உன் தங்கை தெரியாமல் செய்த தவறை மன்னிக்கக்கூடாது? சகோதரன் தவறு செய்தால் ஏழெழுபதுதரம் அவனுக்கு மன்னிக்கவேண்டும் என இயேசுசாமி சொல்லியிருக்கிறார் அல்லவா என அப்பா சுட்டிக்காட்டினார்கள். தன் தவறை உணர்ந்த அருண், தன் தங்கையிடம் கோபப்பட்டதற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டான். அவளும் தான் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்டாள். இருவரும் சமாதானமானார்கள்.

அன்புக்குட்டீஸ், நீங்களும் உங்களுக்கு விரோதமாக தவறு செய்பவர்களுக்கு மன்னிப்பீர்களா? அவர்களை நேசிப்பீர்களா?

**வேதவாசிப்புப்பகுதி :** மன்னிக்க மறுத்த ஊழியக்காரன் - மத்தேயு 18:21-25

**மனப்பாட வசனம் :** ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். எபேசியர் 4:32.

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.்.பர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

## MEMORY VERSE CONTEST - 2016

**The Memory Verse Contest is scheduled to be held on 23rd September 2016.**

**You can download your respective memory verses from Pre-KG to Grade 12 from our church website.**

**LEARN AND BE BLESSED.**

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 1 அநாதியான கர்த்தரே
ஆராதனை இறுதி கவி : பாமாலை 205 கவி 2 கர்த்தர் தந்த

**01-07-2016**

| | | |
|---|---|---|
| பாமாலை | 194 | அருள் ஏராளமாய் பெய்யும் |
| பாமாலை | 179 | பயத்தோடும் பக்தியோடும் |
| கீர்த்தனை | 160 | உந்தன் சித்தம் போல |
| கீர்த்தனை | 161 | என்னை ஜீவபலியாய் |
| கீர்த்தனை | 162 | ஐயா உமது சித்தம் |

**08-07-2016**

| | | |
|---|---|---|
| பாமாலை | 165 | கிறிஸ்து எம் ராயரே |
| கீர்த்தனை | 102 | இரங்கும் இரங்கும் |
| பாமாலை | 112 | தெய்வன்புதான் மா இனிமை |
| கீர்த்தனை | 119 | கிஞ்சிதமும் நெஞ்சே |
| கீர்த்தனை | 121 | விசுவாசியின் காதில் பட |
| கீர்த்தனை | 117 | இயேசு என் அஸ்திபாரம் |

**15-07-2016**

| | | |
|---|---|---|
| பாமாலை | 16 | போற்றும் போற்றும் |
| பாமாலை | 124 | நீர் திவ்யவழி இயேசுவே |
| கீர்த்தனை | 175 | பயந்து கர்த்தரின் |
| கீர்த்தனை | 176 | ஆத்தும ஆதாயம் |
| கீர்த்தனை | 179 | ஜீவ வசனம் கூறுவோம் |

**22-07-2016**

| | | |
|---|---|---|
| பாமாலை | 2 | அலங்கார வாசலாலே |
| பாமாலை | 140 | ஆராய்ந்து பாரும் கர்த்தரே |
| பாமாலை | 128 | ஆண்டவா பிரசன்னமாகி |
| கீர்த்தனை | 156 | என்ன என் ஆனந்தம் |
| கீர்த்தனை | 133 | தெய்வன்பின் வெள்ளமே |
| கீர்த்தனை | 132 | எல்லாம் இயேசுவே |

**29-07-2016**

| | | |
|---|---|---|
| பாமாலை | 3 | ஆ கர்த்தாவே தாழ்மையாக |
| பாமாலை | 106 | நான் பாவிதான் |
| பாமாலை | 144 | தூய்மை பெற நாடு |
| கீர்த்தனை | 95 | நீயுனக்குச் சொந்தமல்லவே |
| கீர்த்தனை | | ஞானஸ்நான மா ஞானத்திரவியமே |
| கீர்த்தனை | 111 | பாவியாம் எனை மேவிப்பார் |

ஆறு மாதங்களைக் கடந்து ஏழாவது மாதத்தைக் காணச் செய்த கர்த்தருக்கு கோடானுகோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன். ஜீலை - ஆகஸ்ட் இரு மாதங்களும் நமக்கு ஆசீர்வாதமாக இருக்க கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறேன்.

10-06-2016 அன்று Junior Church First Term Assessment நடக்கக் கர்த்தர் கிருபை செய்தார். பிள்ளைகள் மிகவும் உற்சாகத்துடன் பங்கு பெற்றனர். இதற்காக உழைத்த Junior Church பொறுப்பாளரையும், ஆசிரியர்களையும் பாராட்டுகிறேன். உற்சாகப்படுத்திய பெற்றோருக்கும் நன்றி கூறுகிறேன்.

10-06-2016 அன்று இரத்ததானம் லத்திபா மருத்துவமனையில் நடந்தது. நமது சபை அங்கத்தினர்கள் அநேகர் பங்கு பெற்று இரத்ததானம் செய்தார்கள். அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இதற்காக உழைத்த Mr. David Rajan, Mr. Jefferson, Mr. Arun Raja, Mrs. Subi Kissinger, Mrs. Initha Moses, Mrs. Sorna Godwin யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

17-06-2016 அன்று நமது ஆலயத்தின் 37 - வது Annual General Body Meeting சிறப்பாக நடந்தமைக்காகக் கர்த்தரைத் துதிக்கிறேன்.

24-06-2016 அன்று பாடல் குழுவினர் ஆராதனையை நடத்திச் சிறப்பித்தனர். பாடல்குழுவினர் மற்றும் அவர்களை பயிற்றுவித்த Mr. Y. Ranjit Singh அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

விடுமுறைக்குத் தாய்நாட்டிற்கும், பிற இடங்களுக்கும் செல்பவர்களுக்குப் பாதுகாப்பான பயணம் அமைய வாழ்த்துகிறேன். இங்குள்ள வீட்டை எல்லாவிதமான பாதுகாப்பான நிலையில் வைத்துச் செல்லவும், விடுமுறை முடிந்து இங்கு வரும் வரைக்கும் கர்த்தரின் கரம் உங்கள் யாவருடனும் இருக்கவும் ஜெபிக்கிறேன். அவசரமாக உதவி தேவைப்படும் நேரம் செயற்குழு அலுவலர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

சிங் ரெத்னம், செயலர்.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

A.Antrina Jessica

D/o.Mr.C.Arun Raja & Mrs.S.Jenifa Arun Raja

24-03-2016

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜுலை 2016

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 01-07-2016 | கணக்கு பார்க்காமல் கொடுத்தல் | ஆதியா. 13:8-18 | 2 கொரிந். 8:1-15 | மாற்கு 14:3-11 | 15 |
| 08-07-2016 | இறையியல்கல்வி: விசுவாசிகளை உருவாக்குதல் | யோசுவா 4:1-9 | 1 தீமோத். 6:11-16 | மத்தேயு 13:1-9 | 1 |
| 15-07-2016 | அருட்பொழிவு திருப்பணி: கிறிஸ்துவின் நறுமணம் | யாத்தி. 29:1-9 | எபேசியர் 5:1-14 | லூக்கா 10:1-11 | 99 |
| 22-07-2016 | பாவ அடிமைத் தனத்தினின்று விடுதலை | 2 சாமுவேல் 12:1-14 | அப்போ. 8:9-25 | மாற்கு 2:1-12 | 32 |
| 29-07-2016 | திருமுழுக்கு: விண்ணிலிருந்து பிறத்தல் | ஆதியா. 8:1-14 | கொலோ. 3:1-11 | யோவான் 3:1-8 | 25 |

## வேத வகுப்பு ஆராய்ச்சி

கோடை விடுமுறைக்குப்பின்பு மீண்டும்
செப்டம்பர் மாதம் முதலாவது
புதன் கிழமை முதல் ஆரம்பமாகும்

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது செயற்குழு உறுப்பினர்
Mr. Premline Prince அவர்களின் தகப்பனார்
Mr. P.Solomon அவர்கள் 14-06-2016 அன்றும்

நமது சபையைச் சேர்ந்த
Mr. Rajeshwararaj அவர்களின் தகப்பனார்
Mr. P.Paul Raj அவர்கள் 15-06-2016 அன்றும்

நமது சபையைச் சேர்ந்த
Mr. T.Rajkumar அவர்களின் சகோதரியின் மகன்
Mr.Miracle அவர்கள் 17-06-2016 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# கல்லெறி யாச்சு ஸ்தேவான் உயிர் போச்சு!

சொல்லெறியும் கல்லெறியும்
கொல்வெறியும் புல்லரித்தும்
நல்லுள்ளம் ஸ்தேவான்உள்ளம்
பொல்லார்க்கும் நல்வாழ்வுவேண்டும்
அற்புதமா ? அடையாளமா ?
வல்லமையா ? விசுவாசமா ?
செர்ப்பமும்இல்லா அர்ப்பருள்ளும்
பொறாமைத்தீ மூண்டுகொண்டது
ஜனங்களின் மனங்களிலும்
இனியவனாம் ஸ்தேவானுக்கும்
தினமொரு பொய்ச்சாட்சி
மனக்கவலை மூட்டிவிட்டார்
இழுத்து வந்தார்
ஆலோசனை சங்கத்துக்கும்
முழுப்பொய்யாய் மோசே, தேவனுக்கும்
எதிர்சொன்னார் தூசணமென்றார்
சொல்லவில்லை கண்டுகொண்டார்
சங்கத்தார், ஸ்தேவான்
எல்லோர்கண்ணிலும் தேவதூதனாய்
பல்கடித்தார் கொல்லநினைத்தோர்
ஆவியுற்றான் ஸ்தேவான்
"வானமும் திறந்தது
தேவனும் வலதுபாரிசம்
மனிதகுமாரனும் " என்றதும்
நகரின் புறம்பே
கூக்குரல் கொலைத்தாக்கு
ஸ்தேவான் முழங்காலில்
" இவர்மேல்பாவம் சுமத்தாதும் "
உச்சக்குரல் சத்தமிட்டு
செத்து விழுந்தான்
துச்சமெனத் தன்னுயிர்
கவலையில்லா ஸ்தேவான் !

ஆதாரம் : அப்போஸ்தலர் 6:8-15, 7:54-60
கவிதை எண் : 189 கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு,
சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். யாக்கோபு 1:14

கிரகங்கள்
பல இருந்தும்
கர்த்தர்
படைத்த
பாரினில்
ஜீவராசிகள்
வாழ்வது
பூமியில்
மட்டுமே
இங்கே...
மாயைகள் உண்டு
மனதைக்
கவரும்
காட்சிகள் உண்டு.
உலக...
இச்சையில்
கட்டுண்டு
சிக்குண்ட
மனிதன்
இன்பம், துன்பம்
எனப்படும்
இரட்டை
நிலையை
அனுபவிக்க
வேண்டியது
வரும்.
உறவு,
உரிமை,
சொத்து,
சுகம்,
ஆசை,
அதிகாரம்,
ஆணவம்
இவைகளில்
இழுக்கப்பட்டு
விட்டால்...

இடுக்கண்
வந்துவிடும்.
புலனின்பமே
புவியில்
பெரிதென
நினைத்தால்
புத்தி
கெட்டுப்போகும்.
சக்தி
விட்டுப்போகும்.
சோதனை வரும்
வேதனை வரும்
கர்த்தரின்
போதனையை
கைவிட்டால்
சாதனை
படைக்க
இயலுமா
உன்னால்...
கண்ணை விற்று
காசு வாங்கி
சித்திரம்
வாங்குவாருண்டோ...
உயிரைக்
கொல்லும்
நஞ்சுண்டு
வாழ்வாருண்டோ...
ஏதுமறியா
மூடனாய்
அறிவிலியாய்
வாழ்ந்து
வீழ்ந்து
போகலாமா....
இனியும்
காலம்
கடந்துவிடவில்லை

இரட்சகர்
இயேசுவின்
பாவமன்னிப்புண்டு
அணைக்கும்
கரமுண்டு.
துன்பக் கடலில்
தத்தளிக்கும்
நமக்குத்
தோணியாய்
வந்துவிடுவார்
இயேசு.
அணுவிலும்
அணுவானவரும்
அகில அண்டமும்
நிறைந்திருப்பவரும்
கண்ணொளி தரும்
பேரொளியானவரும்
கருணா சாகரமும்
தீவினையை
தீக்கிரை
ஆக்குபவரும்
தாயினும் மேலான
தயை தருபவரும்
நம் கடவுளாம்
கர்த்தர் ஒருவரே
கர்த்தரின்றி
எனக்கில்லை
புகலிடமென
அவரைப்
பற்றென பற்றுபவர்
யாராயினும்...
இருலோகத்திலும்
நன்மை பெறுவானே...
சோகம்
என்பதை அறியானே...

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

கழுகு ஓர் அற்புதமான பறவை. சத்துவத்திற்கும், பலத்திற்கும் அடையாளமாக கழுகு குறிப்பிடப்பட்டுள்ளது. கழுகு தன் கூட்டைக் கன்மலையிலும், கன்மலை சிகரத்திலும், நெடிதுயர்ந்த மரத்தின் உச்சியிலும் கட்டி மிகவும் பாதுகாப்பான இடத்தில் வசிக்கும். மிக உயரத்தில் பறக்கும் ஆற்றல் கொண்டவை. ஒருவன் தேவனிடம் நெருங்க நெருங்க அவன் எண்ணம், செயல், நோக்கம் அனைத்தும் உயர்ந்து வருகிறது. தரையைப் பார்த்துக் கொண்டே நம்முடைய முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாய் கொண்டு வாழாமல் உயர்ந்த பரத்துக்கடுத்த காரியங்களிலும் கருத்தைச் செலுத்த வேண்டும். “நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்” கொலோ 3:1. கழுகுகள் மிக அபாரமான பார்வைத் திறன் உடையவை. ஐந்து கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள ஒன்றைத் தெளிவாகப் பார்க்க முடியும். தரையில் நகரும் எலி, கோழிக்குஞ்சு போன்ற ஓர் இரையைப் பர்த்ததும், தடைகள் வந்தாலும் அது தன் கவனத்தைத் திசை திருப்பாது, வேகமாக கீழே பாய்ந்து அதைக் கவ்விக்கொண்டு போய் கொன்று உண்ணும். உயர்ந்த தரிசனமும், தடைகளின் போது சிதறாத கவனமும் நம்மை வெற்றியடைய செய்யும். “அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர், நான் அதிகமாய் அசைக்கப் படுவதில்லை” சங் 62:2. கழுகுகள் புயலை விரும்புகின்றன. புயல் வரும் போது மற்ற பறவைகள் எல்லாம் ஓடி ஒளிந்து கொள்ளும். கழுகு மட்டும் தன்னுடைய வேகத்தை இரண்டு மடங்கு அதிகரித்துக் கொண்டு சிறகினை விரித்து காற்றில் மிதந்து இன்னும் மேலே பறக்கும். நம் வாழ் நாட்களில் ஏற்படும் புயல்கள் போன்ற சவால்களை உயர பறக்கக் கிடைக்கும் சந்தர்ப்பங்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். “சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்” யாக் 1:12. கழுகுகளின் பறக்கும் சாகச சக்திகளும், வலிமையும் பிறப்பிலே வருபவை அல்ல. அவை கழுகுகளால் ஒரு காலகட்டத்தில் கற்றுக் கொள்ளப்படுபவை தான். கழுகு தன் கூட்டைக் கட்டும்போது முட்களையும், சிறு கற்களையும் வைத்து அதன் மேல் மிருதுவான இறகுகளைப் பரப்பி முட்டையிட்டு அடைகாத்து, அது குஞ்சுகளாக வந்து பறக்கும் நிலையை அடைந்தவுடன், தாய் கழுகு தன் கூட்டை கலைத்து முட்களையும், கூர்மையான கற்களையும் வெளிப்படும்படி செய்து விடுகின்றன. முட்கள் குத்துவதால் கூட்டை விட்டு வெளியேறும் அவற்றை, தாய் கழுகு கீழே தள்ளி விடும். பயத்தால் அவை கீச்சிட்டு கீழே விழுமுன் வேகமாக வந்து தன்னுடைய பரந்து விரிந்த இறக்கைகளின் மேல் தாங்கி மலை உச்சிற்கு கொண்டு வரும். குஞ்சுகள் இறக்கை அடித்து பறக்கத் தொடங்கும் வரை இவ்வாறு நடைபெறும்.

தேவனுடைய மக்கள் இவ்வாறு தான் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். "கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறதுபோல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்" உபா 32:11,12. வாழ்க்கையில் சில கஷ்டங்களும், கசப்பான அனுபவங்களும் மனிதனுக்கு அவசியமானவையே. அவைகளின் ஊடாக, "பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன்" (ஏசாயா 41:10) என்ற ஆண்டவர் நம்மைப் பல வழிகளில் பயிற்றுவித்து, இரட்சித்து, நம்மை வழிநடத்துகிறார். கழுகு தரையில் பாம்புடன் சண்டை போடாது. பாம்பை தூக்கி மேலே கொண்டு போய் கீழே போட்டு விடும். காற்றுமண்டலத்தில் பாம்பால் எதுவும் செய்ய பெலன் கிடையாது. அது போல நாமும் வேத தியானம், ஜெபம், உபவாசம் இவைகளின் மூலம் கடவுளுடன் நெருங்கி ஜீவிக்கும் போது தான் சாத்தானுடைய தந்திரங்களுக்கு ஆளாகாமல் ஜெயமாக வாழ முடியும். "இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன், ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது" லூக்கா10:19. கழுகிற்கு வயதாகி பெலனை எல்லாம் இழந்து போகும்போது, ஒரு கன்மலையின் மேல் போய் அமர்ந்து, அங்கிருக்கும் பாறையில் தன் அலகை மோதி உடைக்கும். தன் அனைத்து இறகுகளையும் பிய்த்தெடுக்கும். பின் புதிய இறகுகள் முளைக்க, மற்றும் அலகுகள், நகங்கள் வளர காத்திருக்குமாம். பின் மறுபடியும் புது பெலன் அடைந்து உயர எழும்பி பறந்து 30 ஆண்டுகள் வாழ தகுதியுள்ளதாகும். அதுபோல நம் சுமையான வாழ்க்கைக்குத் தேவையற்ற பழைய பழக்கவழக்கங்கள் இடையிடையே நீக்கப்பட்டு, கர்த்தருக்குக் காத்திருக்கும் போது, அவர் நமக்குத் தரும் பெலத்தினால் உலகையும், சத்துருவையும் எதிர் கொள்ள தேவன் நம்மைப் புது பெலத்தினால் நிரப்புவார். "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" ஏசாயா 40:31. ஆம், அவரின் வசனத்தைத் தியானித்து, ஜெபித்து, உபவாசித்து அவருடைய நேரத்திற்காகக் காத்திருக்கும் போது காண்டாமிருகத்துக்கொத்த பெலனை தேவன் நமக்குத் தந்து நம்மை வழிநடத்துவாராக.

ஜெபிக்க ஜெபிக்க மனம் புத்தம் புதிய நல்ல இருதயமாய் மாறும்
துதிக்க துதிக்க மன பாரம் நீங்கி நம் துக்கமெல்லாம் தீரும்
கவலையெல்லாம் நீங்கும் கண்ணீர் எல்லாம் மறையும்
கழுகு போல புது பெலனடைந்து நம்மை பெலவானாய் மாற்றும்

இனிதா மோசஸ்

## ஆபிராம்!!!

ஆபிரகாம் பாலஸ்தீனிய நாடான கேரார் என்னும் பகுதியில் குடிபெயர்ந்து ஒரு வருடமும் நான்கு மாதமுமானது. அச்சமயம் கர்த்தர் சாராளை நினைந்தருளினார். அவர் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனை ஆபிரகாமுக்குப் பெற்றெடுத்தார். ஆபிரகாம் அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டார். கர்த்தர் கூறியபடி குழந்தை பிறந்த எட்டாம் நாளன்று விருத்தசேதனமும் பண்ணுவித்தார். ஈசாக்கு பிறந்தபோது, ஆபிரகாம் நூறு வயது உள்ளவராயிருந்தார். சாராளோ தொண்ணூறு வயதுள்ளவராயிருந்தார். குழந்தை ஈசாக்கு பால்குடிமறந்த அன்று ஆபிரகாம் பெரிய விருந்தொன்றை ஆயத்தம் செய்திருந்தார். விருந்திற்கு அந்நாட்டின் பெரியவர்களையும், பாலஸ்தீன மன்னன், அபிமெலேக்கு மற்றும் அவரது வேலைக்காரர் மற்றும் அநேகர் வந்து உண்டு, மகிழ்வுடன் பிள்ளையை கண்டு களித்தனர்.

சாராளுக்கு ஈசாக்கு பிறந்ததைக் கேட்ட ஆபிரகாமின் தகப்பன் தேராகு மற்றும் சகோதரன் நாகோர் குடும்பமாக வந்து அவர்களோடு அம்மகிழ்ச்சியில் பங்கேற்றனர். அவர்களோடு பல நாட்கள் செலவழித்தனர்.

அப்பொழுது ஆகார் ஆபிரகாமுக்கு பெற்ற இஸ்மவேல் பதினான்கு வயதுள்ளவனானான். கர்த்தர் அவனோடே இருந்தார். அவன் வளர்ந்து வில் எறிவதில் வல்லவனானான்.

காலங்கள் கடந்து சென்றது. ஈசாக்கு ஐந்து வயது நிரம்பிய பிள்ளையாக இருந்தான். ஒருநாள் அவன் இஸ்மாயிலுடன் கூடார வாசலருகே உட்கார்ந்திருந்தான். இஸ்மவேல் தன்னுடைய வில்லை எடுத்து நாணேற்றி ஈசாக்கைக் குறிவைத்து எறிய எத்தணித்தான். இதைப்பார்த்த சாராளின் மனது பதறியது. உடனே ஆபிரகாமை அழைப்பித்து, அவன் செய்த காரியத்தை விளக்கி, அவனை தன்னை விட்டு விலக்கும்படி கூறினாள்.

ஆபிரகாம் சாராளுக்கு செவிக்கொடுத்தார். ஆபிரகாம் மறுநாள் காலமே எழுந்திருந்து 12 அப்பங்களையும், 1 துருத்தியில் தண்ணீரையும் ஆகாரிடத்தில் கொடுத்து அவளையும் இஸ்மவேலையும் தன்னுடைய கூடாரத்தைவிட்டு வெளியே அனுப்பினார். ஆகாரும் இஸ்மவேலும் பாரான் வனாந்தரத்திற்கு சென்று அங்கே வெகுகாலம் தங்கியிருந்தனர். இஸ்மவேல் வில்லாளனாய் இருந்தான்.

பின்னர் ஆகாரும் இஸ்மவேலும் எகிப்துக்குச்சென்று அங்கே வாழத் தொடங்கினார்கள். ஆகார் தன்னுடைய மகனுக்கு எகிப்திலிருந்து பெண்கொண்டாள். அவளது பெயர் மேரிபாள். மேரிபாள் இஸ்மவேலுக்கு நான்கு குமாரரையும் இரண்டு குமாரத்திகளையும் பெற்றாள். பின்பு இஸ்மவேல் தன்னுடைய தாயார், மனைவி பிள்ளைகளுடன்

வனாந்தரத்திற்குத் திரும்பினான். அவர்கள் வனாந்தரத்திலே தங்களுக்குக் கூடாரங்களை அமைந்து அங்கே தங்கினார்கள்.

கர்த்தர் ஆபிரகாமினிமித்தம் இஸ்மவேலுக்கு நல்ல மந்தையைக் கொடுத்தார். அவன் பலுகிப் பெருக ஆரம்பித்தான். இப்படி இஸ்மவேல் வனாந்தரத்தில் தங்கியும் பயணித்தும் வெகுகாலம் சென்றது. இஸ்மவேல் தன்னுடைய தந்தையாகிய ஆபிரகாமைப் பார்க்கவில்லை.

ஆபிரகாம் சாராளிடம் சென்று, நான் போய் என் மகன் இஸ்மவேலைப் பார்க்க வேண்டும் என்று என் மனது வாஞ்சிக்கிறது. ஏனெனில் அவனைப் பார்த்து வெகுகாலமாயிற்று என்றார். இஸ்மவேல் தன்னுடைய உடைமைகளுடன் வனாந்திரத்தில் தங்கியிருப்பதாக கேள்விப்பட்ட ஆபிரகாம் தன்னுடைய ஒட்டகத்தில் ஏறி வனாந்தரத்திற்கு இஸ்மவேலைக் காணப்புறப்பட்டார்.

ஆபிரகாம் மதிய வேளையில் இஸ்மவேலுடைய கூடாரத்தை சென்றடைந்தார். இஸ்மவேலுடைய மனைவி தன் குமாரருடன் கூடாரத்தின் வெளியே உட்கார்ந்திருந்தாள். இஸ்மவேலும் ஆகாரும் அங்கே இல்லாதிருந்தார்கள்.

ஆபிரகாம் இஸ்மவேலுடைய மனைவியிடம் இஸ்மவேல் எங்கே என்று விசாரித்தார். அவள் இஸ்மவேல் வயல்வெளிக்கு வேட்டைக்குச் சென்றுள்ளதாக அறிவித்தாள். ஆபிரகாம் தன்னுடைய ஒட்டகத்தைவிட்டு இறங்கமாட்டேன் என்று சாராளுக்கு உறுதி செய்து கொடுத்ததினிமித்தம் ஒட்டகத்திலேயே இருந்தவாறு இவைகளைக் கேட்டார்.

பின்பு ... நடந்ததென்ன?

நன்றி: யாசேரின் புத்தகம் தமிழாக்கம் & தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஆகஸ்ட் 2016

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 05-08-2016 | திருவிருந்து என்னும் சாக்கிரமெந்து | யாத்தி. 12:1-14 | 1 கொரிந். 10:14-22 | லூக்கா 22:7-20 | 42 |
| 12-08-2016 | திருப்பணி: எங்கும் எங்கெங்கும் | 1 இராஜா. 17:1-16 | கலாத்தியர் 2:1-10 | மத்தேயு 13:47-52 | 107:1-16 |
| 19-08-2016 | கடவுளும் பல்சமய மக்களும் | ஆமோஸ் 9:1-12 | ரோமர் 2:17-29 | யோவான் 10:14-18 | 66 |
| 26-08-2016 | வன்முறைச் சூழலில் அமைதி | 1 சாமுவேல் 24:1-12 | ரோமர் 12:14-21 | மத்தேயு 5:38-48 | 52 |

"ஆண்டவரே, எனக்கு இரங்கும், நாடோறும்
உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்." சங்கீதம் 86:3

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- பாடகர் குழுவின் பாடல் ஆராதனை, வருடாந்திர பேரவைக்கூட்டம் யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காகவும் அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

